தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

அனுப்புநர்

நாள் : 27.09.2024



கா. தமிழரசன்
அனைத்து வகை மாற்றுத்திறனாளி அலுவலர்கள்
ஆசிரியர்கள் ஒருங்கிணைப்பு குழு கூட்டமைப்பு
மாநில ஒருங்கிணைப்பாளர்
425/2 நிலா நகர்
திருத்துறைப்பூண்டி ரோடு
மன்னார்குடி – 614001

பெறுநர்

இணை இயக்குநர்
(பணியாளர் தொகுதி)
பள்ளிக் கல்வித் துறை
டிபிஐ வளாகம்
கல்லூரிச் சாலை
சென்னை 600006

பொருள் : தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005ன்படி கீழ்காண் தகவல்கள் தெரிவிக்க கேட்டுக் கொள்ளுதல் சார்பு

------

1. அரசாணை எண்.101 பள்ளிக் கல்வித்துறை நாள் 18.05.2018 மற்றும் அரசாணை எண்.151 பள்ளிக் கல்வி (SE)(1) துறை நாள் 09.09.2022ன்படி, அலுவலகப் பணியாளர்களாக 27125 பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டன. அதில் மாற்றுத்திறனாளிகள் எத்தனை பேர் பணி புரிகின்றனர் ?

2. பணிபுரியும் மாற்றுத்திறனாளியில் உடல் ஊனமுற்றோர் எத்தனை பேர் பணிபுரிகின்றனர் ?

3. மொத்த இப்பணியிடங்களில் வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலம் நிரப்பப்படும் பணியிடங்கள் எவை எவை எனக் குறிப்பிடவும்.

இத்துடன் ரூ.10/- க்கான அஞ்சலக முத்திரை ஒட்டப்பட்டுள்ளது.

இப்படிக்கு
[signature]

4. பிரிவு F2 - வின் படி ந.க.எ.ண் 65199/F/RTI/2024 பதில் அளித்திருப்பது சட்டத்திற்கு முரண்பாடானது. ஆகையால் மேல்முறையீட்டு அலுவலராகிய நீங்கள் இதற்கு தகுந்த தகவலினை அளித்திடுமாறு கேட்டுக் கொள்கிறேன். இத்துடன் தாங்கள் அலுவலத்திலிருந்து வந்த பதில் நகலினையும் நான் அனுப்பிய பொதுத் தகவலாக கேட்ட விண்ணப்பத்தையும் இதனுடன் இணைத்து அனுப்புகின்றேன். எனக்கு தகுந்த தகவலினை அளித்திடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

<u>குறிப்பு</u>:

மேல் முறையீட்டிற்கு தொகை எதுவும் செலுத்தப்பட தேவையில்லை மற்றும் அஞ்சலக வில்லை ஒட்டத்தேவையில்லை.

இப்படிக்கு

65199
O.No

# தகவல் உரிமைச் சட்டம் 2005 ன்படி 19 (1) மேல் முறையீடு

அனுப்புநர் நாள்: 24.10.2024

234

29/10/24

திரு. கா. தமிழரசன்,
425 -2, நிலா நகர்,
திருத்துறைப்பூண்டி ரோடு,
மன்னார்குடி – 614 001.
திருவாரூர் மாவட்டம்

RTI
நாள்!
70235
29/10/24

பெறுநர்

**மேல்முறையீடு பொதுத்தகவல் அளிக்கும் அலுவலர்**
பள்ளிக் கல்வித்துறை,
டிபிஐ வளாகம்,
கல்லூரிச்சாலை,
சென்னை – 06.

**பொருள்** : மேல்முறையீட்டு தகவல் கோருதல் - சார்பு.

1. திரு. கா. தமிழரசன், 425 -2, நிலா நகர், திருத்துறைப்பூண்டி ரோடு, மன்னார்குடி – 614 001, திருவாரூர் மாவட்டம் என்ற முகவரியில் வசித்து வருகிறேன்.

2. 27.09.2024 அன்று பொதுத்தகவல் அளிக்கும் அதிகாரிக்கு தகவல் கோரி இருந்தேன். அதனை அவர்பிரிவு 2 F - ன் படி நிராகரித்து உள்ளார். தகவல் உரிமைச் சட்டம் பிரிவு 7 (1) - ல் குறிப்பிடப்பட்டுள்ளது போல் பிரிவு 8 மற்றும் 9 –ன் கீழ் மட்டுமே நிராகரிக்கப்பட வேண்டும்.

3. நான் மேலே கோரியுள்ள தகவல்கள் அனைத்தும் இவ்வலுவலகத்தை சார்ந்தது. கேள்விகளாக குறிப்பிடவில்லை. அரசாணையை சுட்டிக்காட்டி பதில் கேட்டுள்ளேன். அப்படி இந்த அலுவலகத்தில் இல்லை என்றால் பிரிவு 6(3)-ன் கீழ் எந்த அலுவலகத்தில் இதற்கான தகவல் உள்ளதோ அதற்கு நீங்கள் மாற்றம் செய்திருக்க வேண்டும். அதையும் செய்யவில்லை.

**பள்ளிக் கல்வி இயக்ககம், சென்னை – 600 006.**
**தகவல் அறியும் உரிமைச் சட்டம் – 2005**

**ந.க. எண். 70235/F/RTI/2024, நாள் : 29.10.2024**

**பொருள் :** தகவல் அறியும் உரிமைச் சட்டம் – 2005 – திரு. கா. தமிழரசன் என்பாரின் மனு – உரிய நடவடிக்கை எடுக்க அனுப்பி வைத்தல் -- சார்ந்து.

**பார்வை :** திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. கா. தமிழரசன் என்பாரின் மனு நாள் : 24.10.2024.

*****

இவ் இயக்ககத்தில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–இன் படி பெறப்பட்ட மனு இணைப்புகளுடன் மேற்படி சட்டத்தின் உட்பிரிவு 6(3)இன் படி தகவல் வழங்க உரிய நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பலாகிறது.

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–இன் முக்கியத்துவம் கருதி மனுதாரர் கோரியுள்ள தகவல்களை உரிய காலகெடுவிற்குள் தகவல் வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. இதில் காலதாமதம் ஏற்படின் சம்பந்தப்பட்ட மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகப் பொதுத் தகவல் அலுவலரே முழு பொறுப்பு ஏற்க நேரிடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**இணைப்பு:** மனு தாள் – 04

- 5 NOV 2024

பள்ளிக் கல்வி இயக்ககம்,

**பொதுத் தகவல் அலுவலர் மற்றும்**
**உதவி இயக்குநர் (சுற்றுச்சூழல்)**

29/10/24

**பெறுநர்**
**பொதுத் தகவல் அலுவலர்,**
**முதன்மைக் கல்வி அலுவலகம்,**
**அனைத்து மாவட்டம்.**

**நகல்**
திரு. கா. தமிழரசன்,
425–2, நிலா நகர்,
திருத்துறைப்பூண்டி ரோடு,
மன்னார்குடி – 614 001,
திருவாரூர் மாவட்டம்.

இந்நேர்வில் மேல்முறையீட்டு அலுவலர் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் ஆவார் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். வருங்காலங்களில் இப்பொருள் சார்ந்த தகவல்களுக்கு பெறுநர் முகவரியில் குறிப்பிட்டுள்ள அலுவலரை தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

E:\assistant\ALL CEO'S.doc